# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW5 | செல்வகுமார் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 15 /03/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் காப்பிளியப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு காப்பிளியப்பட்டி கிராமத்தில் 12 ஏக்கர் நிலங்கள் உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறேன். இரண்டு நாய்கள் வளர்த்து வருகிறேன். இரண்டு நாய்களில் ஒருநாயை முதல் நாள் இரவில் இருந்தே காணவில்லை. கடந்த 11.09.2016 ம் தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் நான் வளர்த்து வந்த மேற்படி காணாமல் போன நாய் எதிரி தங்கராஜ் தோட்டத்தில் இறந்துகிடப்பதாக தகவல் அறிந்து பார்ப்பதற்காக சென்றேன். மேற்படி தங்கராஜ் தோட்டத்திற்கு சென்ற போது தங்கராஜும் அவரது அப்பா கந்தசாமியும் என்னை தகாத வார்த்தையால் பேசினார்கள். நாயை காணாமல் பார்க்க சென்ற என்னை அவ்வாறு பேசினார்கள். தங்கராஜ் கீழே இருந்த கல்லை எடுத்து எனது தலையில் எறிந்தார் அந்த கல்லானது எனது வலதுபுற கண்புருவத்தில் பட்டு எனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. அதில் எனக்கு ரத்தம் வந்தது ரத்தத்தை தொடைத்து கொண்டு இருந்தேன். அப்போது தங்கராஜும், கந்தசாமியும் எனது இரண்டு கைகளையும் ஆளுக்கொரு கையாக பிடித்துக்கொண்டார்கள். மேற்படி தங்கராஜ் மனைவி சித்ரா வீட்டில் இருந்து கையில் மூங்கில் குச்சியை எடுத்துக்கொண்டு வந்தார் அந்த குச்சியின் மேல்பகுதியில் இரும்பு போட்டு இருந்தது. அதைக்கொண்டு சித்ரா என் தலையில் தாக்கினார். மேற்படி சித்ரா என்னை தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்டது. அந்த தலைக்காயத்தின் தழும்பு தற்போது வரை எனக்குள்ளது.அப்போது எனது அப்பா

குப்புச்சாமி அங்கே வந்தார் அவரையும் தங்கராஜ் கல்லால் எறிந்தும் சித்ரா தடிக்குச்சியால் அடித்தும் காயத்தை ஏற்படுத்தினார்கள். அப்போது சென்னியப்ப கவுண்டர் மகன் ராக்கியப்ப கவுண்டர் மற்றும் பழனியப்ப கவுண்டர் மகன் அ.சா.1 சண்முகவேல் ஆகியோர் வந்து எங்களுக்குள் சண்டையை விலக்கிவிட்டார்கள். நானும் எனது தந்தையும் காய்கறி வண்டியில் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம்.அங்கு மருத்துவர்கள் இல்லை என்பதால் ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனைக்கு சிகிக்சைக்கு வந்தோம். மேற்படி சி.எப்.மருத்துவமனையில் 11.09.2016 ம் தேதி முதல் 19.09.2016 ம் வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.4 போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

போலீசார் என்னை விசாரணை செய்த போது முதல்விசாரணையில் சொன்ன சங்கதியை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். விவசாயம் செய்து கொண்டே கேரளாவில் பைனாஸ்-ம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். பைனாஸ் தொழில் பார்ப்பதற்காக கேரளாவிற்கு சென்றுவிட்டு ஒரு சில நாட்களில் ஊருக்கும் திரும்பி வந்துவிடுவேன். நான் அவ்வாறு எத்தனை நாட்கள் கேரளாவில் இருந்தும், ஊருக்கு வந்து செல்வதுமாக இருந்தேன் என்றால் சம்பவம் நடந்த காலத்தில் கேரளாவில் தான் இருந்தேன். ஒரு சில நாட்கள் ஊருக்கு வந்து இருந்தேன். சம்பவம் நடந்த போது ஊரில்தான் இருந்தேன். எனது நாய் சம்பவம் நடந்த முதல்நாள் இறந்துவிட்டதாக சொல்லும் சங்கதியை எனது புகாரிலும் போலீசாரிடமும் சொல்லியுள்ளேனா என்றால் சம்பவம் நடந்து 5 வருடம் ஆவதால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எனது நாய் காணாமல்போய் தேடிப்பார்த்ததில் அது தங்கராஜ் தோட்டத்தில் கிடப்பதாக தகவல் வந்தது என்று எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரச்சனை நடந்ததாக நான் சொல்லியிருப்பதில் சாயந்தரம் 5.00, 6.00 மணியளவில் நடந்து இருக்குமா என்றால் 4.00 லிருந்து 4.30 மணிக்குள் நடந்தது. தங்கராஜ் என்ன வகையான கல்லால் என்னை எறிந்தார் என்றால் ரோட்டு சைடில் கிடக்கும் கருங்கல்லால் எறிந்தார். இந்த வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் ரோட்டு பகுதியா? அல்லது தோட்டத்தின் உள்பகுதியா என்றர் குள்ளவீரன்பட்டியிலிருந்து காவேரியம்மாபட்டி சாலையில் உள்ள எனது

தோட்டத்திற்கு செல்லும் மண்பாதையின் அருகில் ரோட்டில் நடந்தது. போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்த இடம் ரோட்டு பகுதி என சொல்லியுள்ளேன் என்றால் போலீசார் என்னைவிசாரணை செய்யவில்லை. முதல்விசாரணையில் தங்கராஜும் அவரது மனைவியும் என்னை தடியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் தங்கராஜும் அவரது அப்பாவும் என்னை பிடித்துக்கொள்ள தங்கராஜின் மனைவி சித்ரா என்னை தடியால் அடித்தார் என்று சொல்லியுள்ளேன். தங்கராஜ் அவரது அப்பா என்னை பிடித்துக்கொள்ள தங்கராஜ் மனைவி சித்ரா என்னைதடியால் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீசார் விசாரணையின் போது நான் மருத்துவமனையில் இருந்ததால் என்னால் சொல்லஇயலவில்லை. போலீசார் என்னை முறையாக விசாரிக்காமல் வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள் என்றால் போலீசார் முதல்முதலாக என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கியதோடு அதன்பிறகு என்னைவிசாரணை செய்யவில்லை. நான் சொல்வதுபோன்று எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தங்கராஜ் மீதுள்ள முன்பகையின் காரணமாக இந்த வழக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) Selvakumar
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(sd) R.Pandy
Judicial Magistrate
Oddanchatram.
Date : 15/03/2021

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW6 | குப்புச்சாமி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | குமாரகவுண்டர் | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 15 /03/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ராயகவுண்டன்புதுாரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.5 செல்வகுமார் எனது மகன் ஆவார். 2016 ம் வருடம் ஒரு நாள் தேதி எனக்கு ஞாபகம் இல்லை சாயந்தரம் 4.30 மணியளவில் எங்கள் வீட்டில் வளர்த்த நாய் ஒன்று எதிரி தங்கராஜ் வீட்டிற்கு பின்னால் இறந்துகிடப்பதை அறிந்து அதை பார்த்துவிட்டு எனது மகனான அ.சா.5 யிடம் காணாமல் போன நாய் எதிரி தங்கராஜ் வீட்டிற்கு பின்னால் இறந்துகிடக்கிறது என்று சொன்னேன். சிறிது நேரத்தில் சத்தம்கேட்டது போய் பார்த்தேன். எதிரி தங்கராஜ், அவருடைய தந்தை கந்தசாமி, தங்கராஜ் மனைவிசித்ரா மற்றும் நல்லம்மாள் ஆகியோர் அங்கு எனது மகனை அடித்துக்கொண்டு இருந்தார்கள். தங்கராஜும் அவரது மனைவி சித்ராவும் கையில் தடிக்கம்பு வைத்து இருந்தார்கள். அங்கு சென்ற என்னை அ.சா.5 ஆன எனது மகன் அருகில் செல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள். கல்லாலும் கம்பாலும் என்னையும் அடித்தார்கள். அதில் எனக்கு தலையிலும், எனது மகனுக்கு தலையிலும் காயம் ஏற்பட்டுவிட்டது. மேற்படி சண்டை நடந்த போது அங்கு வந்த ராக்கியப்பகவுண்டரும், அ.சா.1 சண்முகவேலும் சண்டையைவிலக்கிவிட்டார்கள். காயம்பட்ட நானும், எனது மகனான அ.சா.5 ம் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம்.அங்கு மருத்துவர்கள் இல்லாததால் சி.எப்.மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். அங்கு ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார்

என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை இந்த சம்பவத்திற்கு பின்பு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஆஸ்பத்திரியில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் சம்பவ இடத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோன்று சம்பவம் நடக்கவில்லை என்றாால் சரியல்ல. தங்கராஜ் மீது எனக்கு முன்பகை உள்ளது என்றால் சரியல்ல. தங்கராஜ் மீதுள்ள முன்பகை காரணமாக பொய் புகார் கொடுத்து இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) Kuppusamy
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(sd) R.Pandy
Judicial Magistrate
Oddanchatram.
Date : 15/03/2021